# உள்ளூராட்சி சேவைகள் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டில் நிதியத்தின் ஒட்டு மொத்த ஓய்வூதியச் செலவினம் கணிப்பீடு செய்யப்பட்டு வருமானச் செலவினக் கணக்கில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் நிதியத்தின் ஓய்வூதியச் செலவினம் ரூபா 3,196,199 ஆக இருந்த போதிலும் ஓய்வூதியத் திணைக்களத்தின் கணனி தரவு முறைமையின் செலவின வகைப்படுத்தலின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஓய்வூதியச் செலவினம் ரூபா 54,139,919 ஆனமையால் ரூபா 50,943,720 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அவ்வேறுபாடுகளை விளக்குவதற்குத் தேவையான கணக்காய்வுச் சான்றுகளைச் சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

(ஆ) வருடாந்தம் நிதியத்திற்குக் கிடைத்த பங்களிப்புப் பணம் திரண்ட நிதியக் கணக்கில் வைக்கப்பட்டிருந்ததுடன் கிடைத்த பங்களிப்புப் பண மீதியை இனங்காணக்கூடிய வகையில் தனிப்பட்ட பேரேட்டுக் கணக்கு பேணப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் பாதீடு விடயப் பொறுப்பு அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | 1986 இன் உள்ளூராட்சி சேவைகள் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியக் கட்டளைக் கோவையின் 8 ஆம் பிரிவு | பங்களிப்பாளரினாலும் உள்ளூராட்சி நிறுவனத்தினாலும் நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட சகல பங்களிப்புப் பணம் தொடர்பான பதிவேடு பேணப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 31,176,110 மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 37,137,830 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 5,961,720 தொகையான வீழ்ச்சியினைக் காட்டியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வட்டி வீகிசாரம் குறைவடைந்ததன் அடிப்படையில் வட்டி வருமானம் ரூபா 963,554 இனால் குறைவடைந்தமை, முதலீடு காலாவதியாகியமையினால் மூலதன இலாபம் ரூபா 5,397,553 இனால் குறைவடைந்தமை என்பன நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) செலவின அறிக்கை
(இ) முதலீடு